மறைந்த திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அனைத்துத் தரப்பு மக்களின் ஏகோபித்த ஆதரவையும், அன்பையும் பெற்றவர். இனிய பண்பும் செயல் திறமும் மிக்கவர். நலிந்த மக்களின் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டவர். சமூக சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். அனைவரிடத்திலும் நட்புறவோடு பழகும் தன்மை கொண்டவர். தனது தொகுதி முன்னேற்றத்திற்கு அரும்பணி ஆற்றியவர். பொது வாழ்வில் அடக்கமுடன் சீரிய முறையில் பணியாற்றிய திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு அவர்கள், தான் சார்ந்திருந்த அரசியல் இயக்கத்தில் சாதாரணத் தொண்டனாக இருந்து பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். கட்சித் தலைமையின்மீது அன்பும், நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டவர்.

திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு அவர்களது மறைவால் துயருற்று வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், கழக அமைப்பிற்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது."

(உ) திரு. கே. சுதர்சனம், உறுப்பினர் மற்றும் முன்னாள் அமைச்சர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போதைய சட்டமன்றத்தில் உறுப்பினராகவும், அமைச்சராகவும் பணியாற்றிய திரு. கே. சுதர்சனம் அவர்கள், 9-1-2005 அன்று மறைவுற்றது குறித்து, இந்தப் பேரவை பேரதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மறைந்த திரு. கே. சுதர்சனம் அவர்கள், இனிய பண்பும், எளிமையும் கொண்டவர். அனைத்துத் தரப்பு மக்களுடனும் நட்புறவு பூண்டு செயலாற்றி, அவர்களது அன்பையும், ஆதரவையும் பெற்றவர். அரசின் திட்டங்களைத் தனது தொகுதி மக்களுக்குக் கொண்டு செல்வதில் மிகுந்த அக்கறை காட்டியவர். தீமைகளை நெஞ்சுரத்துடன் எதிர்த்து நிற்கின்ற துணிச்சல் படைத்தவர். தான் சார்ந்திருந்த அரசியல் இயக்கத்தில் சாதாரணத் தொண்டனாக இருந்து, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். கட்சித் தலைமையின்மீது அன்பும், ஆழ்ந்த நம்பிக்கையும், அளவற்ற விசுவாசமும் கொண்டவர் திரு. கே. சுதர்சனம் அவர்கள்.

2005 பிப்ரவரி 1] [பேரவைத் தலைவர்]

திரு. கே. சுதர்சனம் அவர்களது மறைவால் துயருற்று வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், கழக அமைப்பிற்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும்வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன்மூலம் இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

முற்பகல் 10—10

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும்வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை, மீண்டும் நாளை (2–2–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10–10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது

- - -

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS